**அதுரெலிய பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அதுரெலிய பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, அதுரெலிய பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றுமஉள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மொத்த வருவாய்கள் ரூபா 17,790,549 தொகை மிகையாகவும் மற்றும் மொத்தச் செலவுகள் ரூபா 811,975 தொகை குறைவாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மிகை ரூபா 18,602,524 இனால் அதிகரித்திருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய வீதவரி மீதி ரூபா 126,551 | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை குறைவாகவும் மற்றும் நான்கு தலைப்புகளில் இருந்து பெற வேண்டிய வருமானம் ரூபா 598,218 தொகை மிகையாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (இ) | ரூபா 2,256,634 பெறுமதியான நிலையான சொத்துக்களின் தன்மையில் காணப்படாத 65 விடயங்களை சேர்ந்த 1249 அலகுகள் தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | அப்புறப்படுத்துவதற்காக பரிந்துரைக்கப்பட்டிருந்த 33 சொத்து அலகுகள் மற்றும் 39 நூலகப் புத்தகங்கள் நிலையான சொத்துக்களில் இருந்து அகற்றப்பட்டிருந்தமையால் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 65,248 இனால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | கடந்த ஆண்டில் கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்காத ரூபா 238,276 தொகை பெறுமதியான பலவின செலவுகளுக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ளப்படாமல் திரண்ட நிதியத்தில் இருந்து செலவு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | முன்னைய ஆண்டின் பெற வேண்டிய வருமானம் எனக் காட்டப்பட்டிருக்காத போதிலும் மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 2,920,506 தொகை வருமானத்திற்காக கடன்பட்டோர் ஏற்பாடு மேற்கொள்ளப்படாமல் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு விடயம் ஒன்று தொடர்பான மீதி மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடு/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதி இடையே ரூபா 3,243,188 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | ஆண்டிற்குரிய பற்றாக்குறையை சீராக்கல் மேற்கொள்வதற்கு முன்னர் மீதி காட்டப்பட்டுள்ளது என. | உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கம் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியசரின் நிதிப் பிரமாணக் கோவை<br>நி.பி. 772(1) | பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்த 6 அலகு சிதைவடைந்த பண்டங்களை அழித்து விடுவதற்கு அல்லது ஏல விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த பண்ட அலகுகள் எதிர்காலத்தில் நடாத்தப்படும் ஏலவிற்பனையில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 16,271,215 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவுகள் ரூபா 196,720 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரி மற்றும் வரி | 2,212,500 | 2,097,815 | 1,801,569 | 1,968,200 | 2,262,500 | 1,392,865 | 1,455,502 | 1,671,954 |
| ii. | வாடகை | 3,834,000 | 3,975,731 | 5,284,650 | 76,167 | 3,854,000 | 5,973,359 | 4,998,780 | 1,385,086 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 325,000 | 264,075 | 206,573 | 320,152 | 317,000 | 308,140 | 275,840 | 262,650 |
| iv. | ஏனைய வருமானங்கள் | 1,101,000 | 2,453,040 | 2,572,946 | 202,893 | 1,140,000 | 1,342,725 | 1,065,895 | 322,799 |
| | மொத்தம் | 7,472,500 | 8,790,661 | 9,865,738 | 2,567,412 | 7,573,500 | 9,017,089 | 7,796,017 | 3,642,489 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 912 வீதவரி அலகுகள் தொடர்பாக ரூபா 1,903,356 இற்கான நிலுவை மீதியொன்றும் மற்றும் 04 கடையறைகளில் இருந்து ரூபா 76,167 தொகைக்கான நிலுவை மீதியொன்றும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. நிலுவை வீதவரியில் ரூபா 778,916 தொகைக்கான 67 மீதிகளின் நிலுவையாகக் காணப்பட்ட காலவறையறை 3 வருடங்களை மிகைத்திருந்தது. | வீதவரி நிலுவையில் ரூபா 314,471 தொகை கடையறை நிலுவையில் ரூபா 58,820 இற்கான தொகையும் அறவிடப்பட்டுள்ளது என மற்றும் வீதவரிக்கான நடமாடும் சேவை நடாத்தி நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | தென் மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் தபபா/பபாகொ/2010/01 மற்றும் 2010 திசெம்பர் 27 திகதிய சுற்றறிக்கையின் பந்தி ii ஏற்பாடுகளுக்கு புறம்பாக சபைக்கு சொந்தமான திப்பொடுவாவ கடைத் தொகுதியில் 7 கடையறைகள் ஏனைய தரப்பினர்களுக்கு சபையினால் அறவிடப்படும் மாதாந்த கடை வாடகையை விட கூடிய வாடகைத் தொகை ஒன்றிற்கு வாடகையாளரினால் துணை வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அதே போல் மேற்கூறிய சுற்றறிக்கையில் 4 ஆவது பந்தியின் பிரகாரம் அதுரலிய பிரதேச சபைக்கு சொந்தமான திப்பொடுவாவ பொது வர்த்தகக் கட்டிடத் தொகுதிக்கு சொந்தமான 5 மீன் பலகைகளுக்குரிய அறவிடப்பட வேண்டிய ஒரே தடவையில் பெறும் பணம் ரூபா 2,447,500 தொகை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | துணை வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த கடையறைகள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு ஏனைய தரப்பினருக்கு வழங்கியிருந்த கடையறைகளை குறிப்பிட்ட உடன்படிக்கைக்கு இணங்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மற்றும் மீன் பலகைகளை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | திப்பொடுவாவ கடையறை கட்டிடத் தொகுதியில் 6 கடையறைகள் எதுவித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் மூடப்பட்டிருந்ததுடன் இந்த கடையறைகள் தொடர்பாக காணப்படும் சிக்கல்களை தீர்த்து அவற்றை வாடகைக்கு கொடுப்பதற்கு வேலைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. | இந்த கடையறைகள் தொடர்பாக கணிப்பீடுகள் மேற்கொண்டு ஏனைய தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள கடையறைகள் தொடர்பாக உரிய உடன்படிக்கைகளுக்கு இணங்க தொடர்நடவடிக்கை எடுக்கப்படும் என. | உடன்படிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் ஏனைய அதிகாரிகளிடம் பெற வேண்டிக் காணப்பட்ட நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 420,000 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 9,051,770 தொகை காணப்பட்டது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நாளாந்தம் ½ தொன் அளவு குப்பைகள் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படுவதுடன் உக்காத குப்பைகள் கொடபிடிய ரஸீனாவத்த எனும் தனியார் காணியில் போடப்பட்டிருந்தது. அதன் படி உக்காத குப்பைகள் சுற்றாடல் நேயத்துடன் அகற்றுவதற்கு செய்முறையொன்று கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை. | மீள்சுழற்சி செய்யக் கூடிய உக்காத பண்டங்களை மாத்தறை மா நகர சபைக்கு வழங்குவதற்கும், மீள்சுழற்சி செய்ய முடியாத பண்டங்களை தனியார் காணி ஒன்றில் தரையை நிரப்புவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது என. | முறையான குப்பை முகாமைத்துவ முறைமை ஒன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அனைத்து உள்ளுராட்சி நிறுவனங்களினாலும் பொது மக்களுக்கு வழங்கும் சேவைகளை வசதிப்படுத்துதல் வினைத்திறன்படுத்துதல் மற்றும் வருமானம் விரைவாக சேகரிப்பதற்காக நிகழ்வுநிலை முறைமைகள் அறிமுகப்படுத்துதல் கட்டாயமாக காணப்பட்ட போதிலும் சபைக்காக இணைய தளமொன்று நிர்மாணித்து கொடுப்பனவு வசதிகளை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2024 மே மாதத்தில் இணையதளம் நிர்மாணிக்கப்பட்டு நிகழ்வுநிலையின் மூலம் கொடுப்பனவு வசதிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையுடைய கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச/ மாகாண அரச முகாமத்துவ சேவை உத்தியோகத்தர்களின் சங்கத்தின் வருடாந்த மாநாட்டில் பங்குபற்றுவதற்காக சபையின் உத்தியோகத்தர்களுக்க தேவையான போக்குவரத்து வசதிகள் வழங்குவதற்காக ரூபா 127,000 தொகை வெளித்தரப்பினருக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் இவ்வாறான கொடுப்பனவுக்காக எதுவித சட்ட ஏற்பாடுகளும் காணப்படாத போதிலும் தனியார் தரப்பினருக்கு சபை நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்தல் சட்டரீதியான கொடுப்பனவு ஒன்றல்ல என அவதானிக்கப்பட்டது. | ஆளுனரின் மற்றும் பிரதான செயலாளரின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது என. | தாபனக் கோவை, நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2015 ஆண்டின் போது அத்துரலிய பிரதேச சபைக்கு 512 G.I கல்வனைஸ் குழாய்கள் 2024 பெப்ரவரி 10 திகதியளவில் 118 குழாய்கள் கிடைத்திருந்த போதிலும் பற்றாக்குறை தொடர்பாக நிதிப்பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்து பொறுப்பு சொல்ல வேண்டிய தரப்பினர்களிடம் அறவீடு செய்வதற்கு அல்லது வழங்கிய தரப்பினரிடம் மீண்டும் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | G.I கல்வனைஸ் குழாய்களின் பற்றாக்குறை தொடர்பாக கணிப்பீட்டு சபை ஒன்று நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் 4 வெளிக்கள வேலை தொழிலாளர்கள், அலுவலக உதவியாளர் ஒருவர் மற்றும் நூலக உதவியாளர் ஆகியோருக்கு பதவிக்குரிய கடமைகள் சாட்டப்படாமல் கடமைகள் சாட்டப்பட்டிருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டின் போது சம்பளம் மற்றும் படிகள் என ரூபா 2,330,993 இற்கான தொகையொன்று சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் சேவை தேவைப்பாட்டுகளின் மீது கடமைகள் சாட்டப்பட்டுள்ளது என மற்றும் சேர்க்கப்பட்டுள்ள பதவிக்கு உரித்தான சம்பளம் மாத்திரம் செலுத்தப்படுகின்றது என. | பதவிகளுக்குரிய கடமைகள் சாட்டப்பட வேண்டும். |